பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 16 | வெள்ளிக்கிழமை | 28.02.2025 | அதிர்வு 208

## துப்பாக்கிச்சூட்டில் 9 வயது சிறுமி பலி



குருணாகல், ஹெட்டிபொல – மகுலாகம பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு 07

# பொறுப்புக்கூறல் விடயத்தில் முன்னேற்றம் எதுவும் இல்லை

## இந்த அரசும் கடந்த அரசுகளைப் போன்றே செயற்படுகின்றது என்று தமிழரசின் எம்.பி. சாணக்கியன் பகிரங்கக் குற்றச்சாட்டு



“பொறுப்புக்கூறல் விடயம் தொடர்பில் ஐ.நா.மனிதஉரிமைகள்பேரவையில்இலங்கை அரசு இம்முறையும் சாதகமான தீர்வினையோ அல்லது புதிய முன்மொழிவுகளையோ முன்வைக்கவில்லை. பொறுப்புக்கூறல் விடயத்தில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்த அரசும் கடந்த காலங்களைப் போன்றே செயற்படுகின்றது.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் ஜனாதிபதி செலவினத் தலைப்பு மீதான குழு நிலை விவாதத்தில் 06

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண புதிய அரசமைப்பு கட்டாயம் தேவை

## நாடாளுமன்றில் மனோ எம்.பி. சுட்டிக்காட்டு

**“புதிய அரசமைப்பு அமைக்கப்பட வேண்டும். அதன் மூலமே நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பின்னர் தான் புதிய அரசமைப்பு தயாரிப்புக்கான நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.”**

**– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.** 06




# பயங்கரவாதத் தடைச் சட்டம் வெகுவிரைவில் நீக்கப்படும்



## சபையில் நீதி அமைச்சர் திட்டவட்டம்

“வெகுவிரைவில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும். தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்.”

– இவ்வாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் ஜனாதிபதி செலவினத் தலைப்பு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 06




வடக்கில் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் சங்கு சின்னத்தின் கீழ் 9 கட்சிகள் கூட்டாகக் களத்தில் குதிக்கத் தயார் எனச் செய்திகள் வெளியாகி உள்ள போதிலும், அந்தக் கூட்டில் பல கட்சிகளின் பங்களிப்பு இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

ஏற்கனவே ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் அக்கூட்டில் இருந்து மெல்ல நழுவி விட்டதான செய்தி வெளியாகி இருந்தது.

விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியும் இந்தக் கூட்டில் இருந்து வெளியேறும் அறிவிப்பு எந்நேரமும் வரும் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் கட்சியை இக்கூட்டில் சேர்ப்பதுதான் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி வெளியேறுவதற்கான காரணம் எனக் கூறப்பட்ட போதிலும் அதிலும் விட வேறு காரணங்கள் இருக்கின்றன 06

# குற்றவியல் நீதி தொடர்பில் ஜெனிவாவில் வாய் திறக்காத வெளிவிவகார அமைச்சர்

## சபையில் கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

"காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மற்றும் நல்லிணக்க அலுவலகம் வலுப்படுத்தப்படும் என்றும், போர்க்களத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் ஆராயப்படும் என்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஜெனிவாவில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், குற்றவியல் நீதி தொடர்பில் ஒரு வார்த்தையையும் அவர் கூறவில்லை. மாற்றம் என்று கூறிக்கொண்டு வந்த இந்த அரசும் பழைய எண்ணப்பாடுகளையே கொண்டுள்ளது."



– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் ஜனாதிபதி செலவினத் தலைப்பு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"கடந்த நாடாளுமன்றத்தில் இதே தலைப்பின் கீழ் விவாதத்தில் கலந்துகொண்டிருந்த போது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மற்றும் அதன் நம்பகத்தன்மை தொடர்பில் குறிப்பிட்டிருந்தேன். அந்த ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் சில உறுப்பினர்கள் வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்திருந்தபோது காணாமல்போனோரின் உறவினர்களையும் சந்தித்ததுடன், கொழும்புக்கு வந்ததும் அது தொடர்பில் அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தனர்.

அந்த அறிக்கையில் இருந்த விடயங்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை. பாதிக்கப்பட்ட தரப்பினர் நட்டஈட்டுக்கு இணக்கம் தெரிவித்திருந்தனர் என்று கூறப்பட்டது. ஆனால், அது தவறான தகவல் ஆகும்.

இதைக் குறிப்பிடுவதற்கான காரணம் என்னவெனில் பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ந்தும் சந்தேகங்கள் நிலவுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை எடுத்துக்கொண்டால் அங்கு இன்னும் இராணுவ மயமாக்கலாகவே இருக்கின்றது. பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதைப் போன்றே தெரிகின்றது.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்குத் தண்டனை இடமாற்றங்கள் இடம்பெறுவதால் அங்கே பகைமை உணர்வு காணப்படுகின்றது. இதனால் மனித உரிமைகள் ஆணைக்குழுவை நம்ப வேண்டியுள்ளது. பொலிஸாரின் செயற்பாடுகளில் அவர்கள் தலையிட வேண்டும்.

கடந்த அரசில் எமது அரசியல் கட்சியினர் தையிட்டி விகாரை விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் உத்தரவு கேட்டபோது நீதிவான் அதற்கு மறுப்புத் தெரிவித்தார். எனினும், அந்த எதிர்ப்புப் போராட்டத்தை எவ்வாறு செய்ய வேண்டும் என்ற விதப்புரைகளை வழங்கியிருந்தார். இதன்படி நாங்கள் அந்த நடவடிக்கையை கவனமாக முன்னெடுத்தோம். எனினும், பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அந்த இடத்துக்குச் சென்று அங்கிருந்த பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சட்டத்தரணிகளைக் கைது செய்திருந்தனர். இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு 8 முறைப்பாடுகள் செய்யயப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகள் சம்பவம் இடம்பெற்ற அன்றே செய்யப்பட்டது. அதன் பிரதிநிதி உடனே அங்கே வந்தார். ஆனால், பொலிஸார் அவரையும் அச்சுறுத்தியுள்ளனர். இன்றுவரையில் அது தொடர்பில் ஏவ்வித விசாரணைகளையும் செய்யவில்லை.

எம்மிடம் ஒரு நம்பிக்கை மட்டுமே உள்ளது. எங்களுக்கு இந்த ஆணைக்குழுவிடம் மட்டுமே செல்ல முடியும். சுதந்திரமாக இந்த ஆணைக்குழுவுக்குச் செயற்பட முடியாவிட்டால் என்ன செய்யலாம். இந்த ஆணைக்குழுவுக்கு முழுமையான அதிகாரம் உள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாக் கூட்டத்தொடரில் கலந்துகொண்டுள்ளார். அவர் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மற்றும் நல்லிணக்க அலுவலகத்தை வலுப்படுத்துவதாகக் கூறியுள்ளார். போர்க்களத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் ஆராயப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால், குற்றவியல் நீதி தொடர்பில் ஒரு வார்த்தையையும் அவர் கூறவில்லை. யுத்த சம்பவத்தில் குற்றவியல் தொடர்பான நீதி மிகவும் முக்கியமானது. ஆனால் அதனை தவிர அனைத்தையும் வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவில் பேசியுள்ளார்.

மனிதப் படுகொலைகளைச் செய்தவர்களை சட்டத்தின் முன் கொண்டு வருவதைத் தவிர அனைத்தையும் கூறியுள்ளார். இவர் பலவற்றை மூடி மறைக்கின்றார். இது மிகவும் கவலைக்குரிய விடயமே. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் இதனையே செய்தார். முறைமை மாற்றம் என்று கூறிக்கொண்டு வந்த நீங்களும் முன்னைய அரசுகளின் எண்ணப்பாடுகளையே கொண்டுள்ளீர்கள்.

ஜனாதிபதி தன் மீதான நம்பகத் தன்மையைப் பாதுகாக்க வேண்டுமாயின் அவர் இதில் தலையிட வேண்டும். எவ்வாறாயினும் கடந்த 77 வருடங்களாக தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றோம். முன்னைய அரசுகள் வடக்கு மற்றும் கிழக்கு பிரச்சினைகளை எவ்வாறு பார்த்ததோ, தற்போதைய அரசும் அதே பார்வையைக் கொண்டுள்ளது." – என்றார்.

# தமிழின அழிப்புக்கு காரணமானவர்கள் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்

## கவீந்திரன் கோடீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

தமிழின அழிப்புக்கு காரணமானவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.




இதற்குக் காரணமானவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் மாத்திரமே தமிழ் மக்களுக்கு உரிய நீதி கிடைக்கும் என நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் அவர் வலியுறுத்தினார்.

இதற்குக் காரணமானவர்கள் தற்போது சமூகத்தில் சுதந்திரமாக நடமாடுகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

சிறந்ததொரு அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

எல்லை நிர்ணயத்தில் பாகுபாடு காட்டப்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் சுட்டிக்காட்டினார்.











# கிராமிய பொருளாதாரத்தை பலப்படுத்தினால் நாட்டின் பொருளாதாரத்தை அதிகரிக்க முடியும்

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

1400 பில்லியன் மூலதன ஒதுக்கீட்டை அடுத்த 08 மாதங்களில் கிராமிய மட்டத்திலான பயனுள்ள திட்டங்களுக்காக பயன்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசாங்க அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்டச் செயலாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிராமிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதால் நாட்டின் பொருளாதாரத்தை 3 வீதம் – 4 வீதமாக அதிகரிக்க முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பொருளாதாரத்தை, கிராமத்தை நோக்கி நகர்த்தும் போது தற்போது உள்ள பொருளாதார வாய்ப்புக்களை பலப்படுத்த முடியுமென தெரிவித்த ஜனாதிபதி, புதிய வாய்ப்புக்களை அறிந்துகொள்வதற்கான அவசியத்தையும் தெளிவுபடுத்தினார்.

இதன்போது மாவட்டங்களுக்கு அமைவான பிரச்சினைகள் குறித்து அரசாங்க அதிபர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்ததுடன், அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அரச நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் கலாநிதி சந்தன அபேரத்ன, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, அரச நிருவாக அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டார மற்றும் மாவட்டச் செயலாளர்களும் இதில் கலந்துகொண்டிருந்தனர் என என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.













# வடக்கு, கிழக்கில் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கான திட்டம் குறித்து ஜப்பான் தூதுவர் கலந்துரையாடல்

இலங்கையில் துறைமுகம் சார்ந்த திட்டங்கள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்களுக்கு முதலீடு செய்ய ஜப்பானிய அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் இசொமதா அகியோவிற்கும் இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

ஜப்பானிய அரசாங்கம் அண்மையில் ஆரம்பித்த பாதுகாப்பு ஒத்துழைப்பு உதவித் திட்டத்தில் இலங்கையையும் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக இசொமதா ஆகியோ தெரிவித்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குப் பிராந்தியத்தில் தேசிய நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காக ஜப்பான், சுவிட்சர்லாந்து மற்றும் தென்னாப்பிரிக்கா இணைந்து மேற்கொள்ளும் திட்டம் குறித்தும் இதன் போது ஆராயப்பட்டதோடு, அதன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜப்பான் தூதுவர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு தெளிவுபடுத்தினார்.

டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் விமான நிலைய முதலீடுகளின் தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

விரைவில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளுமாறு ஜப்பானியத் தூதுவர் இசொமதா அகியோர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு அழைப்பு விடுத்தார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.





# பொது மயானத்தில் ரி56 துப்பாக்கி மீட்பு



கம்பஹா – மாஹேன பொது மயானத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி56 ரக துப்பாக்கி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண வடக்கு குற்ற விசாரணை பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ரி56 ரக துப்பாக்கிக்கு மேலதிகமாக 22 துப்பாக்கி ரவைகளும் இதன்போது கண்டெடுக்கப்பட்டுள்ளன.



# எகிப்து தூதுவருடன் ஜனாதிபதி சந்திப்பு



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் எகிப்து தூதுவர் ஆதில் இப்ராஹிம் அஹமட் இப்ராஹிம் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இந்த சந்திப்பானது ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இலங்கை மற்றும் எகிப்துக்கு இடையில் நீண்ட காலமாகக் காணப்படும் நட்புறவைப் பலப்படுத்துவது தொடர்பிலும் இரு நாட்டுச் சுற்றுலா மற்றும் முதலீட்டுத் துறைகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், மத்திய கிழக்கு வலயத்தின் தற்போதைய நிலைமை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# இலங்கையர்களின் விசா பிரச்சினைக்கு தீர்வு வழங்கத் தயாராகும் இத்தாலி



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் இலங்கைக்கான இத்தாலிய தூதுவர் டெமியானோ பிரான்கோவிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கும் இத்தாலிக்கும் இடையிலான தற்போதைய இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், இலங்கையின் புதிய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் திட்டத்திற்கு இத்தாலிய அரசாங்கம் ஆதரவளிக்கும் என்று தூதுவர் டெமியானோ பிராங்கோவிக் தெரிவித்தார்.

இலங்கையின் சுற்றுலா, துறைமுகங்கள் மற்றும் முதலீட்டுத் துறைகளுக்கு இத்தாலிய அரசாங்கம் வழங்கக் கூடிய ஆதரவு குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இத்தாலியில் தொழில் வாய்ப்புகளை எதிர்பார்த்திருக்கும் இலங்கை இளைஞர்களின் விசா பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க எதிர்பார்த்திருப்பதாகவும் இத்தாலிய தூதுவர் தெரிவித்தார்.

இத்தாலியில் பணிபுரியும் இலங்கையர்களுக்கும், இத்தாலியில் தொழில் வாய்ப்புகளை எதிர்பார்த்திருக்கும் இலங்கையர்களுக்கும் சட்டப்பூர்வமான தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு தற்போது தயாரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்குவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் வேட்பாளராகத் தமது பெயர் அறிவிக்கப்பட வேண்டும், தங்களுடைய கட்சியினருக்கு யாழ் மாநகர சபையில் பத்து வட்டாரங்களில் போட்டியிட இடம் அளிக்க வேண்டும் என்பன போன்ற நிபந்தனைகளை மேற்படி கூட்டுத் தொடர்பாக இடம்பெற்ற இரண்டு சுற்றுப் பேச்சுக்களின் போதும் கோடிகாட்டி இருக்கிறார் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் இப்பேச்சுக்களில் பங்கு பற்றிய முன்னாள் யாழ் மாநகரசபை மேயர் மணிவண்ணன்.

அது பேச்சில் பங்கு பற்றிய மற்றைய தரப்புகளுக்கு அதிருப்தி தந்ததாகக் கூறப்படுகின்றது.

தவிரவும், தங்கள் கூட்டில் போட்டியிட்டு சில ஆசனங்களைப் பெற்றுக் கொண்டு, பின்னர் அதனை வேறு தரப்புகளோடு சேர்ந்து அரசியல் லாபமாக்கிக் கொள்ள மணிவண்ணன் குழுவினர் முயலலாம் என்று கருதிய சங்கு கூட்டணியின் பிரமுகர்கள் சிலர், அதன் காரணமாக மணிவண்ணன் குழுவினர் தமது சங்குக் கூட்டில் போட்டியிடுவதானால் அது தொடர்பாக சங்குக் கூட்டு உறுப்பினர் படிவங்களில் கையெழுத்திட்டு, சங்கு கூட்டு உறுப்பினர்களாகத் தங்களைப் பதிந்து கொண்டே அதன் கீழ் போட்டியிட வேண்டும் என்ற நிபந்தனையை முன்வைத்தனர் என்றும் தெரிகின்றது.

அப்படி சங்கு கூட்டணி உறுப்புரிமையை ஏற்றுக் கொண்டால், தேர்தலின் பின்னர் கூட்டின் முடிவுக்கு மாறாக பிற தரப்புக்களோடு சேர்ந்து செயல்பட முயற்சித்தால், அத்தகையவரை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர் பதவியில் இருந்து சங்குக் கூட்டணி இலகுவாக வெளியேற்ற முடியும் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதனால் இந்த நிபந்தனைக்கு இணங்க மணிவண்ணன் குழு மறுப்பதாகத் தெரிகிறது.

அத்தோடு மணிவண்ணன் குழுவுக்கு யாழ்ப்பாண மாநகர மேயர் பதவி என்ற உறுதியை முற்கூட்டியே வழங்கினால், தேர்தலின் பின்னர் சங்குக் கூட்டணி பிற தரப்புகளோடு கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்கும் தீர்மானங்களுக்குப் போவது நெருக்கடிக்கு உள்ளாகலாம் என சங்கு கூட்டணித் தரப்பு கருதுவதாகவும் தெரிகிறது.

இந்தக் காரணங்களினால் சங்குக் கூட்டணியில் மணிவண்ணன் தரப்பினரின் தமிழ் மக்கள் கூட்டணியை சேர்ப்பதில் சங்கு கூட்டணி பிரமுகர்களுக்கு நெருக்கடியும், அதே போல மணிவண்ணன் தரப்பினருக்கு அதிருப்தியும் இருப்பதாகத் தெரிகிறது.

இந்தக் காரணங்களினால் மேற்படி கூட்டில் மணிவண்ணன் தரப்பினரின் தமிழ் மக்கள் கூட்டணி இடம்பெறாது என்ற அறிவிப்பை அதன் தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரன் விரைவில் பகிரங்கமாக வெளியிடுவார் எனத் தெரிய வருகிறது.

---

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“வரவு – செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் எதிர்க்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் விடயதானத்துக்குப் பொறுப்பற்ற வகையில் பேசுகின்றார்கள். விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்கின்றார்கள். இருப்பினும் ஒருசிலர் பொறுப்புடன் செயற்படுவது வரவேற்கத்தக்கது.

தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாங்கள் மறக்கவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று அன்றும் குறிப்பிட்டோம். இன்றும் குறிப்பிடுகின்றோம். அதேபோல் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக கொண்டு வந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கும் நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்தோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் ஆகியவற்றை மீளாய்வு செய்வதற்காக நீதியரசர் (ஓய்வுநிலை) ஹர்ஷ குலரத்ன தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த நடவடிக்கைகள் அடுத்த தேர்தல் வரை இழுத்துச் செல்லப்படமாட்டாது.

பூகோளபயங்கரவாதம்மற்றும்பூகோள நவீன சவால்கள் ஆகியவற்றை எதிர்க்கொள்ளும் வகையில் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய சட்டம் விரைவில் இயற்றப்படும். உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் கோட்பாடுகளுக்கு அமைவாகவே புதிய சட்டம் இயற்றப்படும். ஆகவே, இந்தச் சட்டம் இயற்றப்பட்டவுடன் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும். இந்த விடயத்தில் எவரும் அச்சம் கொள்ள வேண்டாம்.

பொலிஸ்மா அதிபருக்கும் பொலிஸ் ஆணைக்குழுவுக்கும் இடையில் முரண்பாடு, சட்டமா அதிபருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முரண்பாடு என்று எதிர்க்கட்சிகள் இன்றும் வங்குரோத்து அரசியலில் ஈடுபடுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் கடும் போட்டி நிலவுவதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், அது இன்று பொய்யாக்கப்பட்டுள்ளது.” – என்றார்.

---

## பொறுப்புக்கூறல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் தற்போது நடைபெறுகின்றது. வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவுக்குச் சென்று பல விடயங்களைக் கூறியுள்ளார். ஆனால், பொறுப்புக்கூறல் விடயத்தில் கடந்த காலங்களில் செய்த விடயங்களை விட புதிய அரசின் புதிய முன்மொழிவுகள் எதனையும் கூறவில்லை. வடக்கு, கிழக்கு மக்கள் பொறுப்புக்கூறல் விடயத்தில் மிகவும் கரிசனையுடன் உள்ளனர். கொல்லப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம்.

எமது மக்களைக் கொலை செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதிலும் உறுதியாக இருக்கின்றோம். ஆனால், கடந்த காலங்களில் அரசுகள் செய்ததைப் போன்றே தற்போதைய அரசும் செயற்படுகின்றது என்பது தெளிவாக விளங்குகின்றது.

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் உள்ளிட்ட பொறிமுறைகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் தற்போது கூறியிருந்தாலும் இவை அனைத்தும் தமிழ் மக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் நிராகரித்த பொறிமுறைகளாகும்.

இதேவேளை, வடக்கு மக்கள் வாக்கு வழங்கியுள்ளனர். உங்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய அரசமைப்பு பற்றி தெளிவாகக் கூறியுள்ளீர்கள். ஆனால், அது தொடர்பில் இன்று வரையில் ஒரு வார்த்தையேனும் கூறவில்லை. எதிர்க்கட்சித் தலைவரின் பெயரை புதிய அரசமைப்பில் நிரந்தரப் பெயராக உள்ளடக்கவுள்ளதாக சபாநாயகர் கூறியுள்ளார்.

அமைச்சர் சந்திரசேகரிடம் ஒன்றைக் கேட்கின்றேன். வடக்கு மக்கள் புதிய அரசமைப்பில் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை எதிர்பார்க்கின்றனர். அது பற்றி நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள். அதிகாரப் பகிர்வை விடுவோம். ஆனால், புதிய அரசமைப்பு வருமா? வராதா? வந்தால் அதில் உள்ளடக்கம் என்ன?

பொறுப்புக்கூறல் விடயத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கான ஒதுக்கீடுகளும் இன்றைய விவாதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையில் பொறுப்புக்கூறல் என்பது மிகவும் பிரதானமான விடயமாகும். ஆனால், வெளிவிவகார அமைச்சர் எந்தச் சாதகமான பதிலையும் வழங்கவில்லை. இதற்கு எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் தக்க பதிலளிப்பார்கள்.” – என்றார்.

---

## இனப்பிரச்சினைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி செலவின தலைப்பின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

“புதிய அரசமைப்பின் தேவைப்பாடு தொடர்பில் அதிகமான தமிழ்ப் பத்திரிகைகளில் எழுதப்பட்டிருக்கின்றன. தேசிய மக்கள் சக்தி அரசின் தேர்தல் விஞ்ஞானக் கொள்கையிலும் அது தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. புதிய அரசமைப்பின் மூலமே இனப்பிச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். குறிப்பாக இந்த அரசு தேர்தல் பிரசாரக் காலப் பகுதியில் புதிய அரசமைப்பு ஒன்றை அதிகாரத்துக்கு வந்து 3 மாதங்களில் உருவாக்குவதாகத் தெரிவித்திருந்தது. ஆனால், தற்போது அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

அத்துடன் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பின்னர் புதிய அரசமைப்பு தயாரிப்புக்கான நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்திருக்கும் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. அதேநேரம் புதிய அரசமைப்பு 3 வருடங்களுக்குப் பின்னர் கொண்டுவரப்படும் என அவர் தெரிவித்திருப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது அவர்கள் தேர்தல் காலத்தில் மக்களுக்குத் தெரிவித்து வந்த வாக்குறுதிக்கு மாற்றமானதாகும்.

மேலும், மலையக மக்களுக்கு ஏற்பட்டிருப்பது 76 வருட சாபக்கேடு அல்ல. 200 வருட சாபக்கேடு. அதனால் அந்த மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

07



# 1000 தோட்டக் குடியிருப்புகளை புனரமைப்பதற்கு நடவடிக்கை

ஆயிரம் பெருந்தோட்டக் குடியிருப்புகளை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்திற்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

75 இற்கும் மேற்பட்ட குடியிருப்பு தொகுதிகள் இதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

அதற்கமைய, பெருந்தோட்டத் துறையுடன் தொடர்புடைய நுவரெலியா, கண்டி, பதுளை, இரத்தினபுரி, மொனராகலை உள்ளிட்ட மாவட்டங்களில் காணப்படும் தோட்டக் குடியிருப்புகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

மேற்படி தோட்டக் குடியிருப்புகளை சுத்திகரித்து புனரமைப்பு செய்து வர்ணம் பூசி சாதாரணமான முறையில் வாழக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும் என அவர் கூறினார்.

இந்த தோட்டக் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு அடையாள அட்டை வழங்குதல், பிறப்புச்சான்றிதழைப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## இனப்பிரச்சினைக்கு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்கு முன்னர் அங்கு முறையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலமே அந்த மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். அதனைவிடுத்து கடந்த காலங்களில் மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளை, அரசியல்வாதிகளை விமர்சிப்பதில் பயனில்லை.

மக்கள் தற்போது இந்த அரசுக்கு ஆணை வழங்கி இருக்கின்றார்கள். அதனால் அரசு மலையக மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு எங்களால் முடிந்த ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

மேலும் மலையகத்தில் அமைக்கப்படும் வீடுகள் தொடர்பில் நான் இந்தச் சபையில் கேட்டிருந்தேன். அதற்குப் பிரதி அமைச்சர் ஒருவர் ஆவேசப்பட்டு பதில் அளித்திருந்தார்.

மலையகத்தில் அமைக்கப்படும் வீடுகள் மாடி வீடா, தனி வீடா என அரசுக்குள்ளே மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. அதனாலே இதனைக் கேட்டேன்.

அதேபோன்று அந்த வீடுகளை அமைப்பதற்குக் காணி வழங்குவதாக இருந்தால் எத்தனை பேர்ச் காணியை அரசு வழங்கப் போகின்றது. ஏனெனில் நாங்கள் மலையக மக்களுக்கு 7 பேர்ச் காணியைப் போராடி பெற்றுக்கொடுத்திருக்கின்றோம்.

கடந்த அரசு காலத்தில் அது 10 பேர்ச் காணியாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதனால்அரசு இந்தக்கேள்விகளுக்கு இந்த வரவு - செலவு திட்ட விவாதம் முடிவடைவதற்கு முன்னர் பதிலை அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்." - என்றார்.

## துப்பாக்கிச் சூட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பவத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் ஒரு வயோதிபப் பெண்ணும் ஒரு சிறுமியும் படுகாயமடைந்து குளியாப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுமி 9 வயதுடையவர் என்றும், ஹெட்டிபொல, மகுலாகம பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, இறந்த சிறுமி தனது பாட்டியுடன் வீட்டில் தங்கியிருந்த போது, அருகிலிருந்த சிலர் பன்றிகளை வேட்டையாடும் சத்தம் கேட்டு, வீட்டை விட்டு வெளியே வந்தபோது இவ்வாறு துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானார் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது.

நேற்று இடம்பெற்ற சம்பவத்தில் படுகாயமடைந்த மேற்படி சிறுமியின் பாட்டி குளியாப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சிறுமியின் சடலம் குளியாப்பிட்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டின்போது பயன்படுத்தப்பட்ட போர் 12 ரக துப்பாக்கி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் அந்தப் பகுதியை விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை ஹெட்டிபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தொடரும் பழைய பல்லவி

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக அநுர குமார திஸநாயக்க பதவியேற்று ஐந்து மாதங்கள் கடந்து விட்டன.

தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசு பதவி ஏற்று நூறு நாள்கள் சென்று விட்டன.

ஆயினும் ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி இன்னமும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்து விட்ட அரசுத் தரப்பாக நடப்பது போல் தெரியவில்லை. மாறாக, இன்னமுமே எதிர்க்கட்சிகள் தரப்பில் இருந்து கொண்டு, முன்னைய ஆட்சியாளர்களை விமர்சனம் செய்கின்ற பழைய பல்லவிப் பாணியைத்தான் அதன் ஆட்சிப் பீடம் இப்போதும் தொடர்ந்து செய்வதாகத் தோன்றுகின்றது.

புதிய அரசு நாட்டின் பல்வேறு பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான தீர்வுகளை முன் வைப்பதை விடுத்து, முன்னைய அரசுகளின் தவறுகளை, முன்னர் எதிரணியிலிருந்து குற்றம் சாட்டியமை போல இப்போதும் ஆளும் தரப்புப் பக்கத்தில் இருந்து கொண்டு அதே வேலையை செய்து கொண்டிருக்கின்றது.

இதுவரை காலமும் பதவியில் இருந்த ஜனாதிபதிகள் தத்தமது வெளிநாட்டுப் பயணங்களுக்கு செலவழித்த பணத் தொகை எவ்வளவு என்று விலாவாரியாக கணக்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றது ஆளும் தரப்பு.

சபாநாயகர், உதவி சபாநாயகர், குழுக்களின் தலைவர் போன்ற பதவிகளில் இருந்தோர் பயன்படுத்திய வாகனங்களின் எண்ணிக்கை, அவர்கள் பயன்படுத்திய எரிபொருள்களின் செலவினங்கள், அவர்களின் உதவியாளர்களின் எண்ணிக்கை என்று இன்னொரு பட்டியலை ஆளும் தரப்பு வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதிகள் நியமித்திருந்த ஆலோசகர்கள், அவர்களுக்கான கொடுப்பனவுகள், செலவுகள் பற்றித் தனியான அறிவிப்புக்கள், கணக்கு வழக்குகள் அரசுப் பக்கத்திலிருந்து வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இந்த வரிசையில் முன்னைய அரசுகள், அரசுத் தலைவர்கள் மேற்கொண்ட செலவின விவரங்களை தேடிக் கண்டுபிடித்து அம்பலப்படுத்தும் செயலைத்தான் ஆளும் தரப்பின் சாதனையாக தேசிய மக்கள் சக்தி முன்வைத்துக் கொண்டிருக்கின்றது போலும்.

எதிரணி தரப்பில் இருந்த போது இவற்றைக் கேள்வி எழுப்பி வெளிக்கொண்டு வந்த தேசிய மக்கள் சக்தியின் பணி வேறு. இப்போது ஆளும் தரப்பில் இருந்து அது ஆற்ற வேண்டிய பணி - பொறுப்பு - கடப்பாடு - வேறு.

இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாமல், இன்னமும் எதிரணியில் இருப்பதாக நினைத்துக் கொண்டு, ஆளுங்கட்சி செயல்படுவதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை.

எங்களுடைய அரசு அதிகாரத்துக்கு வந்து நூறு நாள்களில் நாம் செய்தவை இவை, நாம் தீர்த்த பிரச்சினைகள் இத்தனை, இத்தகைய நெருக்கடிகளுக்கு எல்லாம் முடிவு கண்டோம் என்று பட்டியல் இடுவதை விடுத்து, அதற்கு முந்திய அரசின் செலவின விவரங்களையும், அநியாயச் செலவுகளையும் பட்டியலிடும் வேலையை இப்போதும் செய்து கொண்டிருக்கின்றது தேசிய மக்கள் சக்தி அரசு.

முன்னைய அரசுத் தலைவர்களும், அரசுகளும் இழைத்த தவறு காரணமாகவே இந்தத் தடவை நாடாளுமன்றத் தேர்தலிலும் ஜனாதிபதி தேர்தலிலும் அத்தரப்புகளுக்கு பெரும் தோல்வியை மக்கள் கொடுத்திருக்கிறார்கள். தேசிய மக்கள் சக்தி மீது நம்பிக்கை வைத்து அதற்கு வாக்களித்திருக்கிறார்கள்.

அந்த நம்பிக்கையை நிரூபிக்கும் விதத்தில் கடமையாற்றுவதற்கு - பணி செய்வதற்கு - தகுதியற்று, லாயக்கற்று நிற்கும் தேசிய மக்கள் சக்தி, முன்னைய ஆட்சித் தரப்புக்களின் தவறுகள் பற்றிய குற்றச்சாட்டுப் பட்டோலையை வைத்துக்கொண்டு தொடர்ந்தும் அரசியல் செய்ய முயற்சிப்பது பெரும் அபத்தமாகும்.

விலைவாசி எகிறி உள்ளது. மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. பல துறைகளிலும் நெருக்கடிகள் நீடிக்கின்றன. புதிய ஆட்சியை ஏற்படுத்திக் கொடுத்த மக்களுக்கு அதனால் நிம்மதிப் பெருமூச்சு விடக்கூடிய சூழல் உருவாக்கப்படவில்லை.

இந்தப் பின்புலத்தில் தொடர்ந்து முன்னைய அரசுகள் மீதான குற்றச்சாட்டுப் பட்டோலையோடு இந்த அரசாங்கத்தின் செயல்பாடு தொடருமானால், கோட்டாபய ராஜபக்ஷ அரசுக்கு நேர்ந்த கதியே இந்த ஆட்சிப் பீடத்திற்கும் விரைந்து ஏற்படும் என்பதை முக்கூட்டியே நினைவூட்டி வைக்க விரும்புகிறோம்.





# மீனவர் பிரச்சினத் தீர்வுக்கு ஆலோசனை கூறி முதல்வர் ஸ்டாலினுக்கு விக்னேஸ்வரன் கடிதம்

மீனவர் பிரச்சினை தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டலினுக்குக் வடமாகாண முன்னாள் முதலமைச்சரும், யாழ் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கின்றார்.

அதன் விவரம் வருமாறு:–

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கட்கு முன்னைய இலங்கை வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் அன்புடன் எழுதிக் கொள்ளும் மடல் இது.

மாண்புமிகு ஐயா!

17.01.2025 ஆம் திகதிய உள்ளூர்ப் பத்திரிகையில் “இந்திய மீனவர்களால் தொடர்கிறது அட்டூழியம் – வடமராட்சி மீனவர்கள் வேதனை” என்ற தலையங்கம் கொண்ட செய்தியை வாசித்தேன்.

இப் பிரச்சினை நேற்று இன்றையதல்ல. பல வருட காலமாகத் தீர்வின்றித் தொடரும் ஒரு தொடர்கதை.

நான் முதலமைச்சராக இருந்த போது (2013-2018) டெல்கியில் இருந்து வந்த ஒரு தமிழ் உயர் அதிகாரியுடன் இது பற்றிப் பேசும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. திருமதி. நுழசயல என்பது அவரின் பெயர் என்று நினைக்கின்றேன்.

நாங்கள் எங்களின் பேச்சு வார்த்தையின் பின்னர் சில முடிவுகளுக்கு வந்தோம். மக்கள் இடர் தீர்க்கும் மாண்புமிகு முதலமைச்சராகிய உங்களுக்கு அம் முடிவுகள் எமது மீனவர் பிரச்சினையைத் தீர்க்க உதவியாக இருப்பன என்ற நம்பிக்கையில் அம் முடிவுகளை இங்கே சுருக்கமாகத் தருகின்றேன்:–

1. தமிழ் நாட்டு மீனவர்களுக்கும் வடமாகாணத் தமிழ் மீனவர்களுக்கும் இடையில் நூற்றாண்டு கால தோழமை, அன்னியோன்யங்கள், உறவு முறைகள் தொடர்ந்து இருந்து வருகின்றன.

2. இழுவைப் படகுகள் பாவனைக்கு வரும் வரையில் இவர்களின் உறவுகள் மிக சுமூகமாய் இருந்து வந்தன.

3. காலாதிகாலமாகப் பாவித்து வரப்பட்ட பாரம்பரிய மீன்பிடி வழிமுறைகள் கடல் மாதாவுக்குக் கலக்கம் ஏற்படுத்தாதவாறு அமைந்திருந்தன. இழுவைப்படகுகள் வந்ததும் நிலைமை மோசடைந்தது. அதிகாலையில் தமிழ் நாட்டுக் கரைகளுக்குத் திரும்பிய இழுவைப் படகுகள் கடல்மாதாவுக்கும், கடல் மீன்களுக்கும் மற்றும் கடல் வாழ் ஏனைய உயிரினங்களுக்கும் ஏற்படுத்திய அட்டூழியங்களை வீடியோ மூலம் அம்மையாரும் நானும் கண்ணுற்றதும் திடுக்கிட்டோம் திகைப்புற்றோம். தற்போது தமிழ்நாட்டு கரையோரக் கடல் வளங்கள் முற்றும் முழுதுமாகச் சூறையாடப்பட்ட நிலையில் இருப்பதைப் புரிந்து கொண்டோம். இதற்குக் காரணம் இழுவைப் படகுகளே என்ற முடிவுக்கு வந்தோம். இவற்றின் பாவனை தொடர்ந்தால் இலங்கையின் கரையோரக் கடல் புறங்களும் மொட்டை நிலையை அடைந்துவிடுவன என்பதை அவதானித்தறிந்து கொண்டோம்.

4. ஆகவே பாக்கு நீரிணையில் இருநாடுகளினதும் இழுவைப் படகுகளின் பாவனை முற்றாகத் தடைப்படுத்தப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம். அவை வங்காள விரிகுடாவில் அல்லது செங்கடலில் தாராளமாக நாள் கணக்காக நங்கூரம் இட்டு நின்று மீன் பிடிக்கலாம் என்று முடிவெடுத்தோம்.

5. பாக்கு நீரிணையில் மீன்பிடிக்கும் இழுவைப் படகுகள் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்ல சில கட்டமைப்பு மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட வேண்டுவன. அவற்றை இரு தரப்பு இழுவைப் படகு உரிமையாளர்கள் செய்து முடித்து இழுவைப் படகுகளை ஆழ்கடலுக்கு அனுப்ப வேண்டிய அனுசரணைகளை இருதரப்பு அரசாங்கங்களும் செய்து கொடுக்க வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.


இது பற்றி அப்போதைய தமிழ்நாடு அரசாங்கத்திற்கும் இலங்கையின் மத்திய அரசாங்கத்திற்கும் தெரிவிக்கப்பட்டது. அப்போது இருதரப்பாரும் இது பற்றி சிரத்தை காட்டவில்லை. ஆனால் மக்கள் மனம் அறிந்த மாண்புமிகு நீங்கள் நினைத்தால் பல வருட கால இந்தப் பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்த்துக் கொண்டுவிடலாம். அரசியல் நீதியாகவும் அது உங்களுக்கு மீனவர்களிடையே இருக்கும் செல்வாக்கை மேம்படுத்தும்.

இழுவைப் படகுகள் பாக்கு நீரிணையில் பாவிக்கப்படாவிட்டால் காலாதிகாலமாக பாரம்பரியமாக பாவிக்கப்பட்ட மீன்பிடி முறைகள் பின்பற்றப்பட்டு தற்போதைய எதிர் நிலையும் பொருளாதார நெருக்கடி நிலைமையும் முடிவுக்குக் கொண்டுவரப்படலாம்.

இதனை நீங்கள் மத்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் செய்ய வேண்டியிருக்கும்.

பல இழுவைப் படகுகளின் உரிமையாளர்கள் இருநாட்டிலும் அரசியல் செல்வாக்குப் படைத்தவர்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களின் தொழிலுக்குப் பாதகம் ஏற்படாமல் வறுமையில் வாடும் இரு தரப்பு மீனவர்களின் நலன் பேணி இதனை நடைமுறைப்படுத்தலாம் என்பது எனது பணிவான கருத்து. மக்கட் செல்வரான நீங்கள் மீனவர் நலன் கருதி இது பற்றி சிந்தித்துச் செயலாற்றுவீர்கள் என்று நம்புகின்றேன்.

– என்று உள்ளது.




# கல்கமுவ – ஆனமடு வீதி நானேரிய வளைவில் ஓட்டோ – வான் நேருக்கு நேர் மோதி விபத்து

**(உடப்பு க.மகாதேவன்)**

கல்கமுவ-ஆனமடு வீதியில் நானேரிய வளைவு வீதியில் ஓட்டோ மற்றும் வான் என்பன ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

நேற்று முன்தினம் இலம்பெற்ற இந்த மோசமான விபத்தில் போது ஓட்டோ பெரும் சேதத்துக்குள்ளாகியுள்ளது. ஓட்டோச் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சிவராத்திரி தினத்தில் சாவகச்சேரியில் புதிதாக இரண்டு சாதனை நிகழ்வுகள்

**(த.சுபேசன்)**

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் பிற்பகல் தென்மராட்சியைச் சேர்ந்த உலக சாதனையாளர் செ.திருச்செல்வம் புதிதாக இரண்டு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

1,500 கிலோ கிராம் எடை கொண்ட வாகனத்தை தனது உடலில் கட்டி கைதடிப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து சாவகச்சேரி பஸ் தரிப்பிடம் வரையான 7கிலோமீட்டர் தூரம் இழுத்தமையுடன் - 3,000 கிலோகிராம் எடை கொண்ட வாகனத்தை தனது காதுகளில் கட்டி 50மீற்றர் தூரம் இழுத்தும் புதிய சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

இந்தச் சாதனை நிகழ்வில் விருந்தினர்களாக சிரேஷ்ட விரிவுரையாளர் சைவப்புலவர் சி. கா.கமலநாதன், மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயப் பிரதி அதிபர் கலைஞானி குமரநாதன் மற்றும் தென்மராட்சி கலாசார பேரவையின் செயலாளர் சசிகரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

60வயதான உலக சாதனையாளர் திருச்செல்வம் இதற்கு முன்னரும் உலக சாதனைகளை நிகழ்த்தி சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# முன்னாள் ஜனாதிபதிகளின் வெளிநாட்டு பயணங்களுக்காக செலவிடப்பட்ட நிதி தொடர்பில் பிரதமர் விவரம் அறிவிப்பு



முன்னாள் ஜனாதிபதிகள் தமது ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டுப் பயணங்களுக்காகச் செலவிட்ட நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியுள்ளனர் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சிறப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுப் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இதன் போது பிரதமர் நிதி தொடர்பான அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

பிரதமர் இது தொடர்பில் மேலும் உரையாற்றுகையில்,

“முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷ 2010 ஆம் ஆண்டு முதல் 2014 வரையான காலப்பகுதியில் வெளிநாட்டுப் பயணங்களுக்காக 3572 மில்லியன் ரூபாயும், 2015 முதல் 2019 வரையான காலப்பகுதியில் மைத்திரிபால சிறிசேனவின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு 384 மில்லியன் ரூபாயும், கோட்டாபய ராஜபக் ஷ 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு இரு வருடங்களில் 126 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டுவரை ரணில் விக்கிரமசிங்க 533 மில்லியன் ரூபாயையும், 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் 2025 பெப்ரவரி மாதம்வரையில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தனது வெளிநாட்டுப் பயணங்களுக்காக 1.8 மில்லியன் ரூபாயும் செலவிட்டுள்ளனர்.

நாமும் பணிகளைச் செய்துள்ளோம். நாமும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளோம். நாமும் மக்களுக்காக பணியாற்றியுள்ளோம். இந்த நாட்டை பிரதிநிதித்துவம் செய்துள்ளோம். ஆனால் அதற்காக நாம் மக்களுக்குச் சுமையாக இல்லாமல் அந்த மக்கள் பணத்தை திட்டமிடலுடனே பணிகளைச் செய்கின்றோம். அவை வார்த்தைகளால் கூறிவிட முடியாது. இப்போது எங்களுக்குக் கூறினீர்கள் தானே. பேச்சில் மாத்திரமல்ல செயலில் காட்டுங்கள். இப்போது நாங்கள் செயலில் காட்டியுள்ளோம்.” – என்றார்.

# அரசியல் கட்சி அங்கீகாரத்தை பெற இன்று முதல் விண்ணப்பிக்கலாம்




2025 ஆம் ஆண்டில் அரசியல் கட்சிகளாக அங்கீகரிப்பதற்குத் தகுதியான தரப்பினரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சியாகச் சின்னங்கள் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்ப பத்திரம் நாளை முதல் மார்ச் மாதம் 28 ஆம் திகதி மாலை 3.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அஞ்சல் மூலம் அனுப்பலாம் என்றும் அல்லது சம்பந்தப்பட்ட கட்சி செயலாளர் தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கலாம் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# இலங்கையின் துறைமுக முதலீடுகளுக்கு ஆதரவளிக்க முன்வரும் நெதர்லாந்து

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் பொனி ஹோர்பஷ் ஆகியோருக்கு இடையில் நேற்று சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பானது ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.



இலங்கையின் துறைமுகங்களை அண்மித்த முதலீடுகளுக்கு நெதர்லாந்து ஆதரவளிக்க தயாராக உள்ளோம் என இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் பொனி ஹோர்பஷ் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் நெதர்லாந்துக்கு இடையில் காணப்படும் நீண்டகால நட்புறவைப் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் சுற்றுலா, துறைமுகம், முதலீட்டு துறைகளின் முன்னேற்றத்துக்கு நெதர்லாந்து அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொடுக்கக் கூடிய ஒத்துழைப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் கலாச்சார மற்றும் தொல்லியல் பெறுமதியான படைப்புக்களை பாதுகாத்தல் , கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆய்வுகள் மற்றும் இலங்கையின் கல்வி மற்றும் பயிற்சிகளுக்கு நெதர்லாந்து அரசாங்கத்தின் ஒத்துழைப்பை வழங்கவும் இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

“க்ளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டத்தை புதிய நிலைக்குக் கொண்டு செல்ல நெதர்லாந்து அரசாங்கத்தினால் வழங்கக்கூடிய ஒத்துழைப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.






# வவுனியா வைத்தியசாலை முன்பாக தாதியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!


(கி.வசந்தன்)

வரவு – செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பளத் திருத்தத்தில் தாதியர் சேவைக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளமை மற்றும் மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் தாதியர்களினால் வைத்தியசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

அந்தவகையில் நேற்றைய தினம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், அச்சமயத்தில் ஒரு மணி நேர பணிப் பகிஷ்கரிப்பிலும் தாதியர் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது, “அரசே! தாதியர்களிற்கு பட்ஜெட்டில் சரியான நீதியைப் பெற்றுக்கொடு!“, “24 மணிநேரம், 365 நாள்கள் வேலை செய்தவர்களுக்கு கொடுப்பனவைக் குறைத்தது ஏன்?“ என்பன போன்ற பதாதைகளை தாங்கியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.







# நுவரெலியா அரச வைத்தியசாலையின் தாதியர் சங்கத்தினர்களும் கவனவீர்ப்பு

**(க.கிஷாந்தன்)**

நுவரெலியா அரச வைத்தியசாலையின் தாதியர் சங்கத்தினரும் நேற்றைய தினம் நுவரெலியா வைத்தியசாலைக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வைத்திய ஊழியர்களுக்கான சலுகைகள் மற்றும் மேலதிக சேவை கால கொடுப்பனவு குறைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர்.

தற்போதைய அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய வரவு – செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ள போதும் வைத்திய ஊழியர்களுக்கான சலுகைகள் மற்றும் மேலதிக சேவை கால கொடுப்பனவு குறைக்கப்பட்டுள்ளன என தாதியர்கள் விசனம் வெளியிட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த தாதியர்கள், எமக்கு நியாயமான தீர்வை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கிறோம். புதிதாக எமக்கு எதுவும் தேவையில்லை. ஏற்கனவே இருந்த சலுகைகளையும் கொடுப்பனவுகளும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றனர்.

நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தாதியர்களின் கடமைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் மதிய இடைவேளையில் மாத்திரமே முன்னெடுக்கப்பட்டது.







# வவுனியாவில் சுயதொழில் முயற்சியாளர்களாக அஸ்வெசும பயனாளிகளை மாற்ற நடவடிக்கை



**(கி.வசந்தன்)**

அஸ்வெசும பயனாளிகளை சுய தொழில் முயற்சியாளர்களாக மாற்றுவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அரச நிவாரணங்களை நீண்ட காலத்திற்கு வழங்க முடியாது என்பதோடு கொடுப்பனவை பெறுகின்ற பயனாளர்களை சுய தொழில் முயற்சியாளர்களாக மாற்றியமைப்பது தொடர்பான வேலை திட்டத்தை தெளிவுபடுத்தும் விதமாக இந்தக் கூட்டம் இடம் பெற்றது.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டுறவுப் பிரதி அமைச்சரும், வன்னி அபிவிருத்தி குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஷ்குமார், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிக செயலாளர், வவுனியா மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள்உட்படஅரசதிணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

# கிழக்கு மாகாண பொது சுகாதார பரிசோதகர்கள் சுகவீன விடுமுறைத் தொழிற்சங்கப் போராட்டம்!






**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)**

கிழக்கு மாகாண பொது சுகாதார பரிசோதகர்கள் நேற்றுப் சுகவீன விடு முறைத் தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள சில பொதுச் சுகாதார காரியாலயங்களில் கடமையாற்றுகின்ற பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுகவீனத் தொழிற்சங்கப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

சம்மாந்துறை பொதுச் சுகாதார காரியாலயத்தில் கடமையாற்றுகின்ற பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நேற்று சுகவீனப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் இன்றும் இப்போராட்டத்தை தொடர இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தின் சுகாதார ஊழியர்களுக்கான கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கையின் போது பொது சுகாதார பரிசோதகர்கள் கருத்தில் கொள்ளப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தசுகவீனவிடுமுறைத்தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்குமாறு கிழக்கு மாகாண அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அதற்கு இது வரை சாதகமான பதில் கிடைக்கப்பெறவில்லை என பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் சீ.எஸ். முத்துகட ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

# கொழும்பில் களமிறங்குவது குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆய்வு!

வரவுள்ள உள்ளூராட்சித் தேர்தலின்போது கொழும்பிலுள்ள தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தமிழரசுக் கட்சி கொழும்பு மாநகரசபை ஆசனங்களைப் பெறுவது தொடர்பான ஆலோசனை கட்டம் கட்டமாக நடைபெறவுள்ளது. இதற்கான தீர்மானம் கட்சியின் மத்திய செயற்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு கட்சியின் செயற்பாட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்புகிறவர்கள் தமது முழுப்பெயர், முகவரி,



தொலைபேசி எண், வட்டாரம், அரசியற் செயற்பாடுகளிலுள்ள அனுபவம் உள்ளிட்ட விவரங்களைக் கொண்ட சுயவிவர விண்ணப்பத்தை கட்சியின் தலைமைச் செயலகத்திற்கு (செயலாளர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, இல.40, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்) அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். விண்ணப்பங்கள் யாவும் மார்ச் மாதம் 03 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கப் பெறவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கட்சிச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், தற்போது நாட்டில் மாற்றம் பெற்றுள்ள அரசியற் கலாசாரத்திற்கு ஈடு கொடுக்கும் விதமாகவும் கொழும்பு வாழ் தமிழ் மக்கள் நீண்ட காலமாக முன்வைத்திருந்த கோரிக்கைக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையிலும் இந்தத் தீர்மானம் கட்சியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் கூறினார்.





# தேசிய மக்கள் சக்தியின் மகளிர் அணியினருடன் வவுனியாவில் மகளிர் விவகார அமைச்சர் சந்திப்பு

(கி.வசந்தன்)

மகளிர் விவகார அமைச்சர் சரோஜினி போல்ராஜ் வவுனியாவிற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்ததுடன், தேசிய மக்கள் சக்தியின் மகளிர் அணியினருடனான சந்திப்பொன்றினையும் மேற்கொண்டிருந்தார்.

இந்தச் சந்திப்பு வவுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, அமைச்சரிடம் வவுனியா மாவட்டத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக பெண்களினால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. கோரிக்கைக் கடிதங்களும் கைகயளிககப்பட்டன.

இதேவேளை, பிரதேச பெண்கள் வலையமைப்பினர் ஊடாக அமைச்சர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந்தச் சந்திப்பில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க, தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள், பொது அமைப்புக்களைச் சேர்ந்த பெண்கள் எ பலரும் கலந்து கொண்டனர்.







# திருக்கழுக்குன்றம் ஆர்ப்பாட்டம்: ஜெயக்குமார், அ.தி.மு.கவினர் கைது

அ.தி.மு.க. பேரூர் செயலாளர் மற்றும் அவரது உறவினர் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து, முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தலைமையில் அ.தி.மு.கவினர் திருக்கழுக்குன்றத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமிழக அரசு மற்றும் பொலிஸாரை கண்டித்து வீதியில் அமர்ந்து மறியலில் ஈடுபட்ட அவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுகுன்றம் நகரப்பகுதியில் வசிப்பவர் தினேஷ்குமார். அ.தி.மு. கவின் திருக்கழுக்குன்றம் பேரூர் செயலாளராக உள்ளார். இந்நிலையில், இவரது வீட்டின் முன்பு சிலர் அடிக்கடி சிலர் மது அருந்திவிட்டு தகராறில் ஈடுபட்டனர் என தெரிகிறது. இது தொடர்பாக, அ.தி.மு.க. பேரூர் செயலாளர் திருக்கழுக்குன்றம் பொலிஸில் புகார் அளித்துள்ளார்.

இதனிடையே, பேரூர் செயலாளர் தினேஷ்குமார், அவரது உறவினர் மோகனை அந்த நபர்கள் அரிவாளால் வெட்டியதில் இருவரும் பலத்த காயமடைந்தனர். செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்து பொலிஸார், வெள்ளாளர் தெருவை சேர்ந்த வினோத்குமார் (வயது 33), திருக்கழுக்குன்றத்தை சேர்ந்த கவுரி சங்கர் அப்பு (வயது 29) ஆகியேரை புதன்கிழமை கைது செய்தனர்.

இந்நிலையில், தாக்குதல் சம்பவத்தை கண்டித்து முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தலைமையில் திருக்கழுக்குன்றம் பஸ் நிலையம் அருகே நேற்று வியாழக்கிழமை அ.தி. மு.கவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றனர்.

பொலிஸார் அனுமதியில்லாமல் போராட்டத்தில் ஈடுபட முயன்ற மாவட்ட செயலாளர் ஆறுமுகத்தை அவரது வீட்டில் கைது செய்ய முயன்றனர். ஆனால், மதுராந்தகம் எம்.எல்.ஏ. மரகதம் உள்ளிட்ட அ.தி.மு.கவினர் ஆறுமுகம் வீட்டின் முன்பு திரண்டு பொலிஸாரின் கைது நடவடிக்கையை தடுத்துள்ளனர். இதனால், பொலிஸாருக்கும் அ.தி.மு.கவினருக்கும் இடையே வாக்குவாதம் மற்றும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

மேலும், போராட்டத்தில் கலந்து கொள்ள வரும் அ.தி.மு.கவினரை பொலிஸார் வலுக்கட்டாயமாக கைது செய்து தனியார் திருமணம் மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர். இதனால், அப்பகுதியில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தலைமையிலான அ.தி.மு.கவினர் திருக்கழுக்குன்றம் – கருங்குழி செல்லும் வீதியில் மாவட்ட செயலாளர் வீட்டின் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் தமிழக அரசு மற்றும் பொலிஸாரை கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து, பொலிஸார், முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், மாவட்ட அவைத் தலைவர் தனபால், மதுராந்தகம் எம்.எல்.ஏ உள்பட அ.தி.மு.கவினரை கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் அடைத்தனர். இதனால், அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.





# சீமானுக்கு எதிரான பாலியல் வழக்கு: விஜயலட்சுமியிடம் தீவிர விசாரணை

சீமானுக்கு எதிரான பாலியல் வழக்கில் நடிகை விஜயலட்சுமியிடம் 7 மணி நேரம் பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தன்னை திருமணம் செய்து கொள்வதாக கூறி ஏமாற்றி விட்டார் என நடிகை விஜயலட்சுமி கடந்த 2011 ஆம் ஆண்டு வளசரவாக்கம் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அந்த புகாரை 2012ஆம் ஆண்டு விஜயலட்சுமி திரும்ப பெற்றுக்கொண்ட நிலையில் பல்வேறு காரணங்களுக்காக இந்த விசாரணை மீண்டும் நடைபெற்று வருவதாகவும், இந்த வழக்கை இரத்து செய்ய வேண்டும் எனவும் சென்னை உயர் நீதிமன்றில் சீமான் மனு தாக்கல் செய்து இருந்தார்.

அந்த மனுவை விசாரித்த நீதிபதி, இந்த வழக்கை விசாரிக்கலாம் எனவும், 12 வாரங்களுக்குள் விசாரணையை முடித்து அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் எனவும் உத்தரவிட்டார். அதன் பேரில் வளசரவாக்கம் பொலிஸார் இந்த வழக்கில் மீண்டும் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர்.

அதன்படி, நேற்று முன்தினம் வழக்கு தொடர்பாக பெங்களூருவில் உள்ள நடிகை விஜயலட்சுமி வீட்டுக்கு வளசரவாக்கம் பொலிஸார் மீண்டும் நேரில் சென்று அவரிடம் சுமார் 7 மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளனர்.



# பாடகர் கே.ஜே.யேசுதாஸ் வைத்தியசாலையில் அனுமதி

பிரபல பாடகர் யேசுதாஸ்‘க்கு நேற்று முன்தினம் இரவு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் சென்னையில் உள்ள தனியார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார் என தெரிவிக்கப்பட்டது.

அவருக்கு இரத்த வெள்ளை அணுக்கள் தொடர்பான சிகிச்சை அளிக்கப் பட்டுவருகிறதுஎன்றும்சமூகவலைதளங்களில் பரவலாகப் பேசப்பட்டது.

இந்த நிலையில் யேசுதாஸ் உடல் நிலை குறித்து வெளியான தகவலுக்கு அவரது மகன் விஜய் யேசுதாஸ் மறுப்பு தெரிவித்துள்ளார்.

தனது தந்தை யேசுதாஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என வெளியாகிய செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்றும், அவர் தற்போது நல்ல ஆரோக்கியத்துடன் அமெரிக்காவில் இருக்கிறார் எனவும் தெரிவித்துள்ளார்.




# 4 இஸ்ரேலிய பணயக் கைதிகளின் உடல்களை செஞ்சிலுவைச் சங்கத்தில் ஒப்படைத்த ஹமாஸ்

ஹமாஸ் அமைப்பு 4 இஸ்ரேலிய பணயக் கைதிகளின் உடல்களை காசாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்துள்ளதாக இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாளை சனிக்கிழமை முடிவடையவுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தின் முதல் கட்டத்தின் இறுதி பரிமாற்றம் இதுவென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸினால் ஒப்படைக்கப்பட்ட 4 உடல்களின் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்படவில்லை எவ்வாறாயினும். அவர்கள் அனைவரும் 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி தாக்குதல்களின்போது கடத்தப்பட்டவர்கள் என இஸ்ரேலிய அதிகாரிகள் கூறுகின்றனர்.

அதேநேரம், இஸ்ரேல் வார இறுதியில் 600 பாலஸ்தீன கைதிகளை விடுவிக்கவிருந்த போதிலும் சில காரணங்களால் அதனைத் தாமதப்படுத்தியிருந்தது.



# ஒஸ்கார் விருது பெற்ற நடிகர் வீட்டிலிருந்து சடலமாக மீட்பு

இரண்டுமுறை ஒஸ்கார் விருது பெற்ற ஹொலிவுட் நடிகர் ஜீன் ஹேக்மன் மற்றும் அவரது மனைவி பெட்சி அரகாவா ஆகியோர் மெக்சிகோவில் உள்ள வீட்டிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

ஜீன் ஹேக்மன் நடிப்பில் 1971 ஆம் ஆண்டு வெளிவந்த “தி பிரஞ்ச் கனெக்ஷன்” மற்றும் 1992 ஆம் ஆண்டு வெளிவந்த அன்போர்கிவன் ஆகிய படங்களுக்கு விருதுகள் பெற்றுள்ளார்.

இந்தநிலையில் ஹொலிவுட் நடிகர் ஜீன் ஹேக்மன் மற்றும் அவரது மனைவி ஆகியோர் சடலங்களாக மீட்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளை அந்த நாட்டு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பங்களாதேஷ் மோதல்களால் இறையாண்மைக்கு ஆபத்து

## இராணுவத் தளபதி வாகர் உஜ் ஜமான் தெரிவிப்பு

பங்களாதேஷில் நடைபெற்று வரும் மோதல்கள் காரணமாக இறையாண்மைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டு இராணுவத் தளபதி வாகர் உஜ் ஜமான் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் கடந்த ஓகஸ்ட் முதல் நடைபெற்ற தொடர் போராட்டங்களையடுத்து வன்முறைச் சம்பவங்கள் பதிவாகின.

இதையடுத்து பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா பதவியை இராஜினாமா செய்து நாட்டை விட்டு வெளியேறினார்.

அதன்பின்னர் யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசாங்கம் அங்கு இயங்கி வருகிறது.

பங்களாதேஷில் தொடர்ச்சியாகப் போராட்டங்களும் மோதல்களும் நடைபெற்று வரும் நிலையில் தற்போது அந்த நாட்டு இராணுவத் தளபதி வாகர் உஜ் ஜமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து வருவதால் ,ஆயுதப்படைகளுக்கு கடமை அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.



மக்கள் ஒற்றுமையுடனும், நிறுவனங்கள் கட்டுப்பாட்டுடனும் செயலாற்ற வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மோதல்கள் காரணமாக நாட்டின் இறையாண்மைக்கு ஆபத்து ஏற்படும் அபாயம் உள்ளதாகக் கூறியுள்ளார்.

இது நாட்டின் ஒற்றுமைக்கும் சுதந்திரத்திற்கும் குந்தகம் விளைவிக்கும் எனக் குறிப்பிட்டார்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.02.2025




இன்று சவால்களை உற்சாகமாக கையாள வேண்டும். உங்கள் பொறுமையை சோதிக்கும் சூழ்நிலை உருவாகும். மனக் குழப்பம் காரணமாக சரியான முடிவெடுக்க இயலாத நிலை இருக்கும்.

பணியிடத்தில் திறமையாக செயல்பட முடியாது. இன்று பணியில் வளர்ச்சி காண கூடுதல் முயற்சி எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்பட நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்தப் போக்கை மேற்கொள்வதன் மூலம் திருப்தி நிலவும்.

நிதிநிலைமையில் வளர்ச்சி காணப்படாது. நிதியில் ஸ்திரத்தன்மையும் காணப்படாது.

இன்று பாதுகாப்பின்மை உணர்வும் பதற்றமும் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று சற்று சுமாரன நாளாக இருக்கும். இன்று நற்பயன் காண பல விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். உங்கள் இலக்குகளை எளிதாக அடைவது இன்று சற்று கடினம்.

பணியிடத்தில் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் முறையாக திட்டமிட வேண்டும். உங்கள் பணிகளை விவேகத்துடன் கையாள வேண்டும்.

உங்களிடம் குழப்பமான எண்ணங்கள் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் தேவையற்ற விவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. பொறுமையை வளர்த்துக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை திருப்திகமாக இருக்காது. அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இது உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி பற்றிய செலவாக இருக்கும்.




இன்று நன்மை விளையும் நாள். அதிர்ஷ்டகரமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எதிர்பாரத பணவரவு காணப்படும்.

உங்கள் பணிகளை முடிப்பதில் வெற்றி பெறுவீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். பிறரின் நன்மதிப்பை பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். இதனால் உறவில் திருப்தி காணப்படும்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் நண்பர்கள் உங்களுக்கு பணம் சார்ந்த உதவி புரிவார்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் மருத்துவ ஆலோசனை மேற்கொள்வது நல்லது.




இன்று உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். இன்று புதிய நண்பர்கள் மற்றும் புதிய தொடர்புகளைப் பெறுவீர்கள். உங்கள் போக்கில் உற்சாகமான அணுகுமுறை காணப்படும்.

உங்கள் பணியில் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணியை திறமையைப் பயன்படுத்தி நல்ல தரத்துடன் முடித்துக் கொடுப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நகைச்சுவையான உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இந்த அணுகுமுறை உங்கள் துணையை திருப்திப்படுத்தும்.

இன்று போதிய பண வரவு காணப்படும். உங்களால் பணம் சேமிக்க இயலும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்திற்கு தேவையான தைரியம் மற்றும் ஆற்றல் உங்களிடம் காணப்படும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் முயற்சிகளில் வெற்றி காண நீங்கள் சிறப்பாக திட்டமிட வேண்டும். இன்று அதிர்ஷ்டம் காணப்படாது.

உங்கள் பணியை திறம்பட ஆற்ற நீங்கள் கவனம் செலுத்தவேண்டும். நீங்கள் விரும்பிய பலனை அடைய முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அதிருப்தி மற்றும் அசௌகரியம் உணர்வீர்கள். உங்களின் வேறுபாடான அணுகுமுறை உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் காணப்படாது. நீங்கள் பணப் பரிவர்த்தனைக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று நீங்கள் விரும்பிய பலனை அடைய பொறுமை அவசியம். சில விஷயங்களில் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். நற்பலன்களைக் காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

உங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்களின் ஏமாற்ற உணர்வு காரணமாக முரண்பாடு காணப்படும். உங்கள் துணையிடம் இதனை வெளிப்படுத்தாமல் கவனமாக இருங்கள். மகிழ்ச்சியை தக்கவைக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் செலவுகள் இன்று உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணத்தை சாதுர்யமாக செலவிட வேண்டும்.




இன்று சமூகமான பலன்கள் கிடைக்கும் நாள். என்றாலும் உறுதியான முயற்சி மேற்கொள்ள வேண்டும். வெற்றி உங்களை நாடி வரும்.

உங்களின் அபாரமான செயல் திறமைக்கு நீங்கள் பாராட்டைப் பெறலாம். உங்கள் தனித்த திறமைகள் உங்களை சிறப்பாக செயல்பட வைக்கும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் நடந்து கொள்வீர்கள்.இதனால் உறவில் பரஸ்பரம் அன்பு மலரும்.

நிதி நிலைமை ஸ்திரமாக சிறப்பாக காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று சிறப்பான ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்கள் மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சாதகமான நாளாக இருக்காது. இன்று நற்பலன்களைக் காண மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். சில சமயங்களில் நீங்கள் பொறுமை இழப்பீர்கள். அமைதியாகவும் ஓய்வாகவும் இருப்பது சிறந்தது.

குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். ஆரோக்கியமான உறவை பராமரிக்க இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று பணவரவிற்கான சாத்தியமான நாள் அல்ல. நீங்கள் தேவையின்றி சில விஷயங்களுக்காக பணத்தை செலவு செய்ய நேரும்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.02.2025




இன்று துடிப்பான நாளாக இருக்காது. மனக் குழப்பங்கள் காணப்படும். பிரார்தனை மற்றும் இசை போன்ற நிகழ்சிகள் மன ஆறுதலை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். முறையாக திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் நன்மை விளையும்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் சண்டை ஏற்பட வாய்புள்ளது. இது உறவின் ஸ்திரத்தன்மையைப் பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இதனால் உங்களுக்குக் கவலை ஏற்படும்.

இனிப்பு உணவு வகைகளை தவிர்க்கவும். இதனால் பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி பெறுவதற்கான ஆற்றலும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். அனைத்து விதத்திலும் செழுமை காணப்படும்.

புதிய வாய்ப்புகள் கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது. இதன் காரணமாக திருப்தியான மனநிலை காணப்படும். உங்கள் பணிகளை விரும்பி அனுபவிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்வான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். மகிழ்ச்சியுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக உள்ளது. நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சியான மனநிலை உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




உங்கள் செயல்களில் யதார்த்தமாகவும் முறையாகவும் இருக்க வேண்டும்.உங்கள்செயல்களைகையாள்வதில் சில தடைகள் காணப்படும். இன்றைய நாள் சராசரி பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் வெற்றி காண கடும் முயற்சி செய்ய வேண்டும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனால் இருவரிடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். இதனை தவிர்க்க முயற்சி செய்யவும்.

நிதி வளர்ச்சி இன்று சாத்தியமில்லை. உங்கள் குடும்பத்துக்காகக் கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியப் பிரச்சினையை தவிர்க்க அதிக நீரைப் பருகவும்.




இன்று உங்கள் செயல்களில் வெற்றி காண்பீர்கள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று உங்களுக்குச் சாதகமான நாள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். நற்பலன்கள் கிட்டும். பணி குறித்து உங்கள் மனதில் திருப்தி காணப்படும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் உணர்வுகளை வெளிப்படையாக பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி ஸ்திரமாக காணப்படும். எதிர்பாரத பண வரவு காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# திருக்கோணைநாதரின் நகர்வலம் நேற்று மாலையில் ஆரம்பமானது



(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை ஸ்ரீ மாதுமையம்பாள் சமேத திருக்கோணைநாதரின் வருடாந்த நகர்வலம் நேற்று மாலை ஆரம்பமானது.

மாலை திருக்கோணேஸ்வரத்திலிருந்து ஆரம்பமாகிய இந்த நகர்வலம் எதிர் வரும் 3 ஆம் திகதி வரை நடைபெற்று 4 ஆம் திகதி காலை கோணைநாதர் மீளவும் திருக்கோணேஸ்வரத்திற்கு திரும்புவார்.



